1973 மார்ச் 8]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இத்திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: துணைத் தலைவரவர்களே, இந்தக் குடதலை ஆற்றின் மீது—அந்த அணை கட்டப்பட்ட நேரத்திலேயே—இந்தப் பாலம் கட்டப்பட்டிருக்கவேண்டும். ஆனால் பழைய அரசு பாலம் கட்டத் தவறி விட்டது. ஆகவே, இந்த அரசு அதைப் பரிசீலித்து, வருகின்ற ஐந்தாண்டுத் திட்டத்திலாவது முதலிடம் கொடுத்து, பாலம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதன் மதிப்பீடு 16 லட்சம் ரூபாய் ஆகிறது. இப்போதைய நிதிநிலை இடம் தராததால், ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கு முன் உரிமை வழங்கப்படும்.

வடார்க்காட்டிலுள்ள காட்டுப் பகுதிகளில் சாலைகள்

* 294. வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஆலங்காயத்திற்கும்—போளூருக்குமிடையிலும், காவலூர்—சிங்காரப்பேட்டைக்கிடையிலும் நெடுஞ்சாலைகள் போடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU M. A. LATHEEF: Mr. Deputy Speaker, Sir, it is now felt that in order to bring about effective administration in the locality and also to provide basic amenities to the people living in that area, there should be roads and it has been the demand of the people for so many years and still it has not been favourably considered. May I know whether this work will be taken up at least in the next financial year? I thought it would be answered by the Public Works Minister and felt that the Public Works Minister was concerned about it. I do not know how it has been shifted to the Electricity Minister. I expect either the Public Works Minister or any other Minister concerned to take up the matter.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: துணைத் தலைவரவர்களே, இந்தச் சாலை கிட்டத்தட்ட 37 மைல் தொலைவு உள்ளது. சிறிய அளவிலே உள்ள வேலைகளைத் தான் காட்டு இலாகா எடுத்துக்கொள்ளலாம். மேலும் இதற்கு 20 லட்சம்

ரூபாய்க்குமேல் செலவு ஆகும். ஆகவே, இந்த வேலையைப் பொதுப்பணித் துறைதான் மேற்கொள்ள வேண்டும்.

Bridge near Anchetty

* 295 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a bridge to Doddahalla near Anchetty where people of Natrapalayam area cannot pass in that road in the rainy season; and

(*b*) if so, when it will be constructed ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) அஞ்செட்டி நகரத்திற்கு அருகில் உள்ள தொட்டஹல்லா ஆற்றின் மீது பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு தற்சமயம் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைக் கேள்வி இல்லை. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கை

பாண்டிச்சேரி பட்டதாரி ஆசிரியர்களின் சம்பள விகிதம் குறித்த, கல்வி அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது விதி 82-ன் கீழ் மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, 82-வது விதியின் கீழ் ஒரு அறிவிப்பைச் செய்ய விரும்புகிறேன். நேற்று டாக்டர் ஹாண்டே அவர்கள் பாண்டிச்சேரியில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்போது நான் அந்த அரசோடு தொடர்புகொண்டு, தகவல் சேகரித்து, தெரிவிப்பதாகச் சொன்னேன். அதன்படி அந்த அரசுடன் தொடர்புகொண்டு தகவல் பெறப்பட்டது. அதை அவைக்கு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.